भारतीय गैर न्यायिक

एक सौ रुपये Rs. 100

रु. 100 ONE HUNDRED RUPEES

सत्यमेव जयते

भारत INDIA

INDIA NON JUDICIAL

தமிழ்நாடு तमिलनाडु TAMILNADU 23/03/2026 FH 922605

சீனுவாசன்
ராமசந்திரன்
புதுச்சேரி.

N.K. Raju
STAMP VENDOR L.No.4/2008
CUDDALORE-2

அனுப்புநர்:

சீனுவாசன் மற்றும் ராமசந்திரன்,
நெ.39, அரவிந்தர் தெரு,
புதுச்சேரி - 605001.

பெறுநர்:

Tamil Nadu Real Estate Regulatory Authority (TNRERA)
No: 1A, 1st Floor, Gandhi Irwin Bridge Road,
Egmore,
Chennai – 600 008.

பொருள்: **"TNRERA"** அனுமதி பெறுதல் மற்றும் தார்சாலை அமைப்பதற்கு ஆட்சேபனை இல்லாச்சான்று வழங்குதல் தொடர்பாக.

ஐயா,

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், லட்சுமிநாராயணபுரம் கிராமத்தில் புல எணகள்: 173/7A, 187/1A, 187/1B, 187/2, 188/2 ஆகிய நிலப்பகுதிகளில் குடியிருப்பு மனைப்பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மனைப்பிரிவுகளுக்கு மத்தியில் எங்களது சொத்தான புல எண்:187/3 அமைந்துள்ளது. இது தொடர்பாக நாங்கள் கீழ்கண்ட உறுதிமொழியை மனப்பூர்வமாக வழங்குகிறோம்.

(i) மேற்கண்ட புல எண்களுக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ள தார்சாலையானது, எங்களது முழுச் சம்மதத்துடனும், பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையிலும் பொதுப்பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ளது.

(ii) இந்தச்சாலை அமைந்துள்ள நிலப்பகுதி, உரிய உள்ளாட்சி அமைப்பின் பெயரில் தானமாக ஒப்படைப்பு (Gift Deed) செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிபடுத்துகிறோம்.

(iii) தற்போது, இந்த மனைப்பிரிவிற்கு (TN RERA) மூலம் முறைப்படி அனுமதி பெறுவதில் எங்களுக்கு எவ்விதமான ஆட்சேபனையும் இல்லை.

(iv) இந்த திட்டம் தொடர்பாகவோ அல்லது சாலை அமைக்கப்பட்ட விதம் குறித்தோ, எதிர்காலத்தில் நாங்கள் எந்தவிதமான புகாரோ அல்லது தடையோ கோர மாட்டோம் என இதன் மூலம் உறுதி அளிக்கிறோம்.

எனவே, இந்த மனைப்பிரிவு திட்டத்திற்கு உரிய அனுமதியை வழங்கிட தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

A. [signature]